## வாதி தரப்பு முதல் விசாரணை தொடர்ச்சி

O.S.No: 939/2024 Date : 25.10.2025

பெயர் : நாகராஜன் வா.சா. 1

| | |
|---|---|
| **வா.சா.ஆ. 7** | பசலி 1402 அடங்கல் கணக்கு பதிவேடு உண்மை நகல். |
| **வா.சா.ஆ. 8** | பசலி 1396 அடங்கல் கணக்கு பதிவேடு உண்மை நகல். |
| **வா.சா.ஆ. 9** | பசலி 1397 அடங்கல் கணக்கு பதிவேடு உண்மை நகல். |

**குறுக்கு விசாரணை**

யாருக்கு எதிராக இவ்வழக்கத்தை தாக்கல் செய்துள்ளார் என்றால் அரசுக்கு எதிராகவும் மின்சார வாரியத்துக்கு எதிராகவும் தாக்கல் செய்துள்ளேன். இவ் வழக்கை தாக்கல் செய்வதற்கு எனக்கு எவ்வாறு உரிமை ஏற்பட்டது என்றால் நான் எனது கிராமத்தின் சங்கத்தின் தலைவராக இருந்து வருவதால் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். தாவா வழக்கின் சொத்து விபரங்கள் தெரியுமா என்றால் தெரியும். தாவாசொத்தின் புல எண் பை மாஸ் எண் மற்றும் அளவுகள் தெரியுமா என்றால் 64 சென்ட் ஆகும். பைமாஸ் எண் 294 மற்றும் 298 ஆகும். மேற்படி பை மாஸ் எண்ணின் புல எண் தெரியுமா என்றால் 204 மற்றும் 208 ஆகும். நான் மேற் சொன்ன பை மாஸ் என்ன இருக்கு தொடர்புடைய புல எண் எது என்பதை எவ்வாறு தெரிந்து கொண்டேனா இருந்தார் வட்டாட்சியர் அலுவலகத்தில் ஆவணம் பெற்று தெரிந்து கொண்டேன் அந்த ஆவணத்தை வழக்கில் தாக்கல் செய்து உள்ளார் என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

நான் வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்து பெற்ற ஆவணத்தை ஆவண பட்டியலுடன் தாக்கல் செய்துள்ளீரா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது போல் வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்து பெற்ற எவ்வித ஆவணத்தையும் இவ்வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் மேற்படி ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாமல் தாக்கல் செய்து விட்டதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை. வா.சா.ஆ.1 பரிவர்த்தனை பத்திரம் யார் யாருடைய பெயரில் எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் வெங்கட்ராமன் ஐயர் என்பவர் சரவணன் நாயக்கர் என்பவருக்கு மேற்படி பரிவர்த்தனை பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார். மேற்படி சரவணன் நாயக்கருக்கு பரிவர்த்தனை மூலம் வழங்கப்பட்ட சொத்திற்கு நான் எவ்வாறு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் மேற்படி சரவணன் நாயக்கர் ஏற்கனவே காலமாகிவிட்டார்.

மேற்படி சரவணன் நாயக்கருக்கு நான் எந்த வகையில் உறவு முறை என்றால் எனது தகப்பனாரின் தாய் மாமன் சரவண நாயக்கர் அவர். இந்த வழக்கை எதன் அடிப்படையில் தாக்கல் செய்துள்ளார் என்றால் ஊர்காரர் என்ற முறையில் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தானது எந்த வகைப்பாட்டை சேர்ந்தது என்றால் கிராமத்தில் உள்ள களத்து மேடு ஆகும். வா.சா.ஆ.1 ஆவணத்தில் எந்த இடத்தில் வெங்கட்ராம ஐயர் சரவண நாயக்கர் என்பவருக்கு ஆவணம் எழுதிக் கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளார் என்றால் எழுதிக் கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளார் என்றால் அந்த ஆவணத்தின் விபரங்கள் எனது வழக்கறிஞர் சொல்லி எனக்கு தெரியும். எனக்கு ஓரளவுக்கு தான் எழுத படிக்க தெரியும்.

வா.சா.ஆ.1 ஆவணத்தில் வெங்கட்ராம ஐயர் என்பவர் தாவா சொத்தானது தனக்கு சொந்தமான சொத்து என எவ்வித சங்கதியும் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. வா.சாஆ.1 ஆவணத்தை எழுதிக் கொடுக்க வெங்கட்ராம ஐயருக்கு எவ்வித உரிமையும் இல்லாத நிலையில் அந்த ஆவணத்தின் மூலம் தாவாசொத்தில் நான் எவ்வித உரிமையும் கோர முடியாது என்றால் சரியல்ல. மேற்படி பரிவர்த்தனை ஆவணம் மூலம் கொடுக்கப்பட்ட சொத்தானது யாருக்கு சொந்தமான சொத்து என்றால் எங்களது கிராமத்துக்கு சொந்தமான சொத்து. அது எங்கள் கிராமம் களத்து மேடு ஆகும். அரசுக்கு சொந்தமான சொத்தை ஒரு தனி நபரோ அல்லது ஒரு சங்கத்தினரோ வேறு நபருக்கு பாராதீனம் செய்ய ஏதேனும் உரிமை உள்ளதா என்றால் இல்லை.

எனது சங்கம் எப்போது பதிவு செய்யப்பட்டது என்றால் 2019 ஆம் ஆண்டுக்கு முன்பாக பதிவு செய்யப்பட்டது. அந்த பதிவு செய்ததற்கு உண்டான ஆவணங்களை வழக்கில் தாக்கல் செய்துள்ளார் என்றால் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி சங்கம் பதிவு செய்யப்பட்ட ஆவணமானது இவ்வழக்கில் எத்தனாவது ஆவணமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி ஞாபகம் இல்லை. மேற்படி சங்கம் எந்த வருடம் பதிவு செய்யப்பட்டது என்றால் 2018 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டது. மேற்படி சங்கமானது இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பின்னிட்டு 2020 ஆம் ஆண்டு தான் பதிவு செய்யப்பட்டது என்றாலும் நான் சொல்வது போல் 2018 ஆம் ஆண்டு மேற்படி சங்கம் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.

2020 ஆம் ஆண்டு அந்த சங்கத்தை புதுப்பித்தோம். நான் வழக்குரையில் குறிப்பிட்டுள்ள பட்டா எண் 1430 என வெங்கட்ராமன் ஐயர் பெயரில் வழங்கப்பட்டதாக

சொல்லப்படும் பட்டாவானது எந்த ஆண்டு வழங்கப்பட்டது என்றால்அது பற்றி எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. வா.சா.ஆ.1 ஆவணம் மூலமாக தாவா சொத்தை வெங்கட்ராமன் ஐயர் என்பவர் சங்கத்திற்கு எழுதிக் கொடுத்ததாக சொல்லப்படும் நிலையில் அதன் பின்னிட்டு 1986 ஆம் ஆண்டு மேற்படி வெங்கட்ராமன் இயற்பெயரில் எவ்வாறு பட்டா வழங்கப்பட்டது என்றால் வெங்கட்ராமாயர் சங்கத்திற்கு தாவா சொத்தை எழுதிக் கொடுக்கவில்லை. மேற்படி பட்டவானது 1976 ஆம் ஆண்டு பெற்றதாக ஆவணத்தில் குறிப்பிட்ட நிலையிலும் வழக்குரையில் 1986 ஆம் ஆண்டு பட்டா பெற்றதாக குறிப்பிட்ட நிலையில் மேற்படி முரண்பட்ட ஆண்டுகள் ஆனது அந்த பட்டாவானது வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றால் இல்லை.

வா.சா.ஆ.2 ஆவணமானது பூவிருந்தவல்லி நீதிமன்றம் யாருக்கு எதிராக தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது என்றால் பல்லாவரம் நகராட்சிக்கு எதிராக தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது. மேற்படி வழக்கானது முழு விசாரணை நடைபெற்ற தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டதா என்றால் இல்லை. பல்லாவரம் நகராட்சி தரப்பில் யாரும் அந்த வழக்கில் ஆஜராகி நடத்தவில்லை. அந்த வழக்கில் நகராட்சிக்கு சொந்தமான சொத்தை குறிப்பிட்டு இருந்தால் நகராட்சி தரப்பில் ஆஜராகி இருப்பார்கள் என்றாலும் வருவாய் துறைக்கு சொந்தமான சொத்தை அந்த வழக்கில் குறிப்பிட்டுள்ளதால் பல்லாவரம் நகராட்சி தரப்பில் யாரும் ஆஜராகவில்லை என்றால் சரிதான்.இதற்கு முன்பாக பூந்தவல்லி நீதிமன்றத்தில் தாவா சொத்து தொடர்பாக நடைபெற்ற வழக்கில் மாவட்ட ஆட்சியர் மற்றும் வருவாய் வட்டாட்சியர் ஆகியோரை தரப்பினராக சேர்த்துள்ளார் என்றால் இல்லை.

வா.சா.ஆ.2 ஆவணமானது பல்லாவரம் நகராட்சிக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணை என்றால் சரிதான். அந்த தீர்ப்பாணை வருவாய்த்துறை கட்டுப்படுத்துமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.வா.சா.ஆ.2 தீர்ப்பாணையானது வருவாய் துறை மற்றும் மின்சார வாரியத்தையும் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. தாவா சொத்து தொடர்பாக வா.சா.ஆ.2 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள வழக்கு யார் தாக்கல் செய்தார் என்றால் அஸ்தினாபுரம் நல சங்கத்தின் தலைவர் பாலன் என்பவர் தாக்கல் செய்திருந்தார்.

வா.சா.ஆ.2 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள சங்கமானது வேறு சங்கம் என்றாலும் இவ்வழக்கில் குறிப்பிட்டுள்ள சங்கமானது வேறு சங்கம் என்றாலும் மேற்படி இரண்டு

சங்கங்கள் வெவ்வேறானது என்பதால் இவ்வழக்கை தாக்கல் செய்ய எனக்கு எவ்வித முகாந்திரமும் கிடையாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணமான நான் இவ்வழக்கின் 2,3 பிரதிவாதிகளுக்கு அனுப்பிய அறிவிப்பில்வா.சா.ஆ.2 தீர்ப்பாணை அரசுக்கு எதிராக நிரந்தர உறுத்து கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது என குறிப்பிட்டுள்ள நிலையில் வழக்கில் அரசு தரப்பினரை ஒரு தரப்பினராக சேர்க்காத பட்சத்தில் அரசு எதிராக தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டதாக தவறான அறிவிப்பு அனுப்பி உள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 ஆவணமானது வில்லங்க சான்றிதழில் தாவா சொத்தானது சங்கத்தின் பெயரில் பதிவு செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளதாக என்றால் இல்லை.

தாவா சொத்தானது அரசுக்கு சொந்தமான சொத்து என்பதால் தான் நான் தாக்கல் செய்த வில்லங்க சான்றிதழில் எனது சங்கத்தின் பெயரில் பதிவு ஏற்பட்டுள்ளதாக எவ்வித பதிவுகளும் அதில் இடம்பெறவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் எந்த வகையாக ஊர் மக்கள் பயன்படுத்தி வந்தார்கள் என்றால் அதில் கோவில் திருவிழாக்கள் மற்றும் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வந்தது தொடர்பாக ஏதேனும் ஆவணங்களை தாக்கல் செய்துள்ளீரா என்றால் இல்லை. அந்த நிகழ்ச்சி மற்றும் விழாக்கள் எனது சங்கத்தின் பெயரில் நடைபெற்றது என்பது தொடர்பாக எடுத்துரைக்க தாவாசொத்தில் அந்த நிகழ்ச்சிகள் நடந்தது தொடர்பான ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளார் என்றால் இல்லை.

தாவாசொத்தில் சங்கம் தொடர்பாக ஏதேனும் கட்டிடம் இருந்ததா என்றால் இல்லை தாவாசொத்தில் ஏதேனும் சுற்றுச்சூழல் அமைத்திருந்தீரா என்றால் அமைத்திருந்தேன் பின்னால் அது இடிந்து விட்டது. தாவாசொத்திற்கு சங்கத்தின் சார்பாக வரி செலுத்தி உள்ளீரா என்றால் செலுத்து உள்ளேன் யாரிடம் வரி செலுத்தினீரா என்றால் கிராம நிர்வாக அலுவலரிடம் வரி செலுத்தினேன் அந்த வரி ரசீதுகளை வழக்கில் தாக்கல் செய்து என்றால் தாக்கல் செய்துள்ளேன்.நான் மேற்படி வரி ரசீதுகளை வழக்கில் தாக்கல் செய்யாமல் தாக்கல் செய்துள்ளதாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.வா.சா.ஆ.5 ஆவணம் புகைப்படத்தில் உள்ள இடமானது தாவா சொத்தா என்றால் ஆமாம். மேற்படி தாவா சொத்தானது தற்போது அரசு பதிவுகளில் யாருடைய பெயரில் உள்ளது என்றால் மின்சார வாரிய பெயரில் உள்ளது. என்னிடம் காட்டப்படும் புகைப்படம் என்றால் ஆமாம். ( **புகைப்படம் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

வா.சா.ஆ.5 மற்றும் 6ல் புகைப்படங்களில் உள்ளவாறு தான் தாவா சொத்து பூர்வத்தில் அமைந்துள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தில் மின் வாரியம் அமைந்தால் அது அங்குள்ள பொது மக்கள் மற்றும் அங்கு வசிப்பவர்களுக்கு உதவியாக இருக்குமா என்றால் ஆமாம். தாவா சொத்தின் அருகில் எவ்வித கோவிலும் அமைந்திருக்கவில்லை என்றால் சரிதான் ஆனால் கோவிலில் நடைபெறும் விழாக்களுக்கு தாவாசொத்தில் தான் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வரும். அது தொடர்பாக எந்த ஆவணமும் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். களத்து மேடானது என்ன வகையான பயன்பாட்டிற்கு இருந்து வந்தது என்றால் விவசாயம் செய்து நெல்மணிகள் அடித்து வைப்பது போன்ற பணிகளுக்காக களத்து மேடு பயன்படுத்தப்பட்டு வந்தது தற்போது அஸ்தினாபுரம் கிராமத்தில் விவசாயம் நடைபெற்று வருகிறதா என்றால் ஒன்று இரண்டு நபர்கள் விவசாயம் செய்து வருகிறார்கள். மேற்படி விவசாய நிலம் தாவாசொத்திற்கு பக்கத்தில் உள்ளதா என்றால் இல்லை அரை கிலோ மீட்டருக்கு தள்ளி உள்ளது.

அரசுக்கு சொந்தமான இடமானது பொதுமக்கள் பயன்பாட்டிற்கு உள்ள இடம் என்றால் சரிதான். அரசுக்கு சொந்தமான சொத்தானது அரசுக்கு தேவைப்படும் பட்சத்தில் அதனை அரசு கையகப்படுத்தி நிர்வகிக்கும் என்றால் சரிதான். வா.சா.ஆ.8 ஆவணத்தில் தாவா சொத்தானது அரசு புறம்போக்கு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் ஆனால் அது அரசால் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கு முன்பாக வேறு பெயரில் அச்சொத்து இருந்தது ஆனால் அரசு பதிவுகளில் தவறாக பதிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. 2017 ஆம் ஆண்டு அரசு மின்சார வாரியத்திற்கு ஒப்படைவு செய்துள்ளது என்றால் சரிதான். தாவாசொத்தில் துணை மின் நிலையம் அமையும் பட்சத்தில் 17,000 மக்களுக்கும் 2000 வணிக நிறுவனங்களுக்கும் மூன்று சிறு தொழில் நிறுவனத்திற்கும் பயன்படும் வகையில் அரசு துணை மின் நிலையம் அமைக்கும் பட்சத்தில் அது மக்களுக்கு பயன்பெறும் திட்டம் என்றால் அது அவர்களுக்கு நல்ல திட்டமாக இருக்கும் தாவாசொத்தின் அருகில் இருந்த அரசுக்கு சொந்தமான நிலத்தை பல்வேறு நபர்கள் ஆக்கிரமிப்பு செய்து விட்டார்கள் கிராமத்தின் சார்பாக தாவா சொத்தை மட்டும் நாங்கள் பாதுகாத்து வந்தோம்.

ஆனால் அதனை தற்போது அரசு மின்வாரியத்திற்கு கொடுத்துவிட்டது. நான் பதிவு செய்யாத சங்கத்தின் பேரில் தாதா வழக்கை தாக்கல் செய்துவிட்டு பின்னிட்டு 2020 ஆம் ஆண்டு மேற்படி சங்கத்தை பதிவு செய்து தவறாக இவ்வழக்கை நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. எனக்கும் இந்த சொத்து இருக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது என்றாலும் உள்நோகத்திற்காக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன்

என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த அனைத்து ஆவணங்களும் தாவா சொத்தானது அரசுக்கு பாத்தியமான சொத்து என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் முறையீட்டிற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிகாக ஒத்தி வைக்கப்படுகிறது.**

S/d xxxx

Typewritten to my dictation in open
court read over to the witness in tamil
in the presence of the accused and
admitted by the witness to be correct.
S/d xxxx
District Munsif-cum
Judicial Magistrate,
Pallavaram.